Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 129

செவ்வாய்க்கிழமை 04 ஏப்ரல் 2023

பங்குனி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# கருநாட்டுக்கேணியில் சிங்களக் குடியேற்றம்



## 180 சிங்களக் குடும்பங்களை விரைவில் குடியேற்ற முயற்சி

முல்லைத்தீவு, ஏப்ரல் 4

முல்லைத்தீவு, கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணியில் 180 சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

»11

## எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்க எந்த எல்லைக்கும் நாம் செல்வோம்!

### துரைராசா ரவிகரன் சூளுரை

முல்லைத்தீவு, ஏப். 4
தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு நாம் எந்த எல்லைக்குப் போகவும் தயாராக உள்ளோம் என்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

»11



14 வருடங்களின் பின்னர்

## 3 தமிழ் அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட்டனர் நேற்று!

வவுனியா, ஏப். 4
படையினர் 26 பேரை படுகொலை செய்து தீமூட்டி எரித்தனர் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் தமிழ் அரசியல்

»11

## எரிவாயு ரூ.1,000 குறைவு!

விரிவு:- பக்.11



## சட்டவிரோத கடற்றொழிலை நிறுத்துமாறு நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஏப். 4
சுருக்குவலை மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழிலைக் கட்டுப்படுத்துமாறு

»11

நாவலர் கலாசார மண்டப விவகாரம்;

## ஆளுநரின் முடிவுக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் வழக்கு

விரிவு:- பக் - 11 இல்

## முல்லைத்தீவில் விபத்து பெண்ணொருவர் இறப்பு!

முல்லைத்தீவு, ஏப். 4
முல்லைத்தீவு - அலம்பில் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில், வெளிநாட்டில் இருந்துவந்த குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

»11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தில் ஈடுபடுவோரே சட்டவரைவுக்கு கலக்கமடைவு!

## நீதியமைச்சர் வியாக்கியானம்

**கொழும்பு, ஏப். 4**

**எதிர்காலத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளவர்களே தற்போது கலக்கம் கொண்டுள்ளனர். பயங்கரவாத செயற்பாடுகளில் எவரும் ஈடுபடா விட்டால் முன்மொழியப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கண்டு அச்சமடையத் தேவையில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பை இந்தச் சட்டம் உறுதிப்படுத்தும். இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கருத்துரைத்த தாவது, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை மறுசீரமைக்கும் யோசனைகளை எதிர்த்தரப்பினர் முன்வைத்தால் அதனை நாம் மீளாய்வு செய்வோம். எதிர்காலத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட வுள்ளவர்களே புதிய பயங்கரவாத தடைச்சட்டவரைவை கடுமையாக விமர்சிக்கிறார்கள்- கலக்கமடைந் துள்ளார். மனித உரிமைகளுக்கு எதிரான ஏற்புகள் காணப்படுமாயின், நாட்டுமக்கள் எவரும் உயர் நீதிமன்றத்தை நாடலாம். அதற்காக சட்டத்தரணிகளை அணுகுவதற்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ச-இ)

## புதிய பயங்கரவாதச் சட்டம் மலையகத்திலும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 4

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு மலையகத்திலுள்ள பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

மலையகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் தொழிற்சங்கங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம், இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி என்பனவே எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் என மேற்படி கட்சிகளின் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, அரச பங்காளிக்கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது முடிவை இன்னும் அறிவிக்கவில்லை. இது பற்றி ஆராயப்பட்டு வருவதாக அந்தக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், மலையகத்தை மையமாகக் கொண்டு செயற்படும் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் என்பன பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியுள்ளன. (ஒ-44)

## மக்களுக்கு அச்சுறுத்தல் என்றால் புதிய சட்டத்தை எதிர்ப்பார்களாம்!

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் பெரமுன விளக்கம்

கொழும்பு, ஏப்.4

மக்களின் பாதுகாப்பு, ஊடக பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவொன்று அவசியம். அதற்கேற்ற வகையிலேயே புதிய சட்டம் அமையும் என்று நம்புகின்றேன். மக்களின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலெனில் அதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரிக்காது. இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்களின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, ஊடகங்களின் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்று அவசியமென்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி இருக்கின்றது.

புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலத்தின் உள்ளடக்கங்கள் எனக்குத் தெரியாது. அது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. ஜே.வி.பி. உட்பட பயங்கரவாத செயலில் ஈடுபட எத்தனிக்கும் நபர்களுக்கு இத்தகைய சட்டம் வலிக்கும். அத்தகையவர்களே போலிப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சில சமூக ஊடகங்கள் நபர்களைக் கொல்லாமல் கொல்கின்றன. மக்களுக்கு பாதுகாப்பு அவசியம். சட்டம் நாடாளுமன்றம்வரும்வரை காத்திருங்கள். ஜனநாயகம் மற்றும் அரசமைப்புக்கு எதிரெனில் அதை சட்டரீதியில் சவாலுக்குட்படுத்த முடியும். காரணிகளை மாற்றலாம். அதில் பிரச்சினை கிடையாது.

மக்களின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டல், ஊடக பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய சட்டமொன்றையே எமது கட்சி எதிர்பார்க்கின்றது.

சட்ட வரைவில் உள்ள சிறந்த அம்சங்களை ஆதரிப்போம். இந்தச் சட்டவரைவு மக்களுக்கு எதிரானது ஊடகங்களுக்கு எதிரானது மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்கு அச்சுறுத்தல் எனில் அதற்கு ஆதரவளிக்கமாட்டோம்.

இந்தக் கருத்தை பொறுப்புடனேயே கூறுகின்றேன் - என்றார். (எ-44)

## இறக்குமதிப் பொருள்களின் விலை 10 வீதத்தால் குறைப்பு

கொழும்பு, ஏப். 4



டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளமையால், அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட இறக்குமதிப் பொருள்களது மொத்த விலை 10 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என்று அத்தியாவசிய இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களிலும், தொடர்ந்தும் விலை குறைவடையும் என அந்தச் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எந்தப் பொருள்களுக்கும், இதுவரை தட்டுப்பாடு ஏற்படவில்லை எனவும் பண்டிகைக் காலத்தில் அனைத்துப் பொருள்களும் தட்டுப்பாடின்றி சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)

## கட்சி தாவுவார்களா எம்.பி.க்கள்? சபையில் இன்று பரபரப்பு

கொழும்பு, ஏப். 4

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது.

தெற்கு அரசியலில் திருப்பு முனையை ஏற்படுத்தும் வகையில் 'கட்சித்தாவலொன்று' இன்று அரங்கேறவுள்ளது என கடந்தவாரம் முழுவதும் தகவல்கள் பரவிவந்த பரபரப்பான சூழ்நிலையிலேயே இன்று சபை கூடுகின்றது.

கொழும்பு, களுத்துறை, பதுளை உட்பட மேலும் சில மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுவர் அரசுடன் இணைவார்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், இது குறித்து அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் இன்னும் வெளியாகவில்லை. (ஒ-44)

## புதிய சட்டத்தால்

# போராட்டக்காரர்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாக்க முயற்சி

### மாதக்கணக்கில் சிறைவைக்கத் திட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, ஏப். 4

கோத்தாபய ராஜபக்சவை விரட்ட வீதிக்கு இறங்கிய இலட்சக்கணக்கான மக்களையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி அதனூடாக மாதக்கணக்காகச் சிறையில் அடைக்க் அரசு முற்படுகின்றது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

கடுவெல பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பிரயோகித்து மக்களின் மனித உரிமைகளை மீறி மக்களைப் பயங்கரவாதிகளாக சித்திரிக்க அரசு முயற்சிக்கின்றது.

அதேவேளை, தொழிற்சங்கத்தினரையும், மாணவர் போராட்டக்காரர்களையும் பயங்கரவாதிகளாக அரசு அடையாளப்படுத்துகின்றது. அரசின் இந்தச் சதி நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

ஏலத்துக்கு விலைபோகும் உறுப்பினர்கள் எம்மிடம் இல்லை. எதிர்க்கட்சியிலிருந்து அரசுக்குச் செல்வதற்குப் பதிலாக அரசிலிருந்து எதிர்க்கட்சிக்கு வருவதற்கே பலர் காத்திருக்கின்றனர். கட்சித்தாவல் செய்தி கேட்டு முன்னைய எதிர்க்கட்சித் தலைவர்கள் தமது உறுப்பினர்களைப் பாதுகாத்துக்கொள்ள சிங்கபூருக்கு அனுப்பியது போன்று எமக்கு அத்தகைய தேவைப்பாடு இல்லை - என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபா 6 கோடி பெறுமதியான ஐஸ் போதை மன்னாரில் மீட்பு

மன்னார், ஏப். 4

**தலைமன்னாரை அண்டிய கடற்பகுதியில் 4 கிலோ நிறையுடைய உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.**

வடமத்திய கடற்படை கட்டளைப்பிரிவினரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கடலில் மிதந்து வந்த நிலையில் அவை மீட்கப்பட்டன.

அவற்றின் பெறுமதி 6 கோடியே 75 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட ஐஸ் போதைப்பொருளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும் வரை கடற்படையின் காவலில் வைக்கப்பட்டுள்ளது எனக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

## மைதானத்துக்குள் மீட்கப்பட்ட கஞ்சா

யாழ்ப்பாணம், ஏப். 4

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இருந்து நேற்றுமுன்தினம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

20 கிராம் எடையுள்ள 15ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சாவே விளையாட்டு மைதான பற்றையினுள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனைத்துப்புரவு செய்ய முயன்றபோது கஞ்சாப் பொதி மீட்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-23)

## காங்கேசன்துறைக் கடலில் 430 கிலோ கஞ்சா மீட்பு

### அனலைதீவைச் சேர்ந்த சந்தேகநபர்களும் கைது

யாழ்ப்பாணம், ஏப். 4

காங்கேசன்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான படகைச் சோதனையிட்டபோது அதிலிருந்து 430 கிலோ உயிர்கொல்லி கஞ்சாவை மீட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கஜான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைக்கு மேற்கே சந்தேகத்துக்கிடமான முறையில் படகொன்று பயணித்ததை சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்துள்ளனர். படகை நெருங்கிச் சோதனையிட்டனர். படகிலிருந்து 430 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. படகில் பயணித்த அனலைதீவைச் சேர்ந்த 2பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட உயிர்கொல்லி கஞ்சாவின் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-23)




## 'விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வார்'

யாழ்ப்பாணம், ஏப்.4

போதைப்பொருள் விழிப்புணர்வு ஓவியக் கண்காட்சி ஒன்று "விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வார்" என்ற தொனிப்பொருளில் நேற்றுத் திங்கட்கிழமை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் மண்டபத்தில் நடைபெற்றது.

காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஓவியங்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்களால் வரையப்பட்டிருந்தன. இந்த நிகழ்வை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சமூக நெறிக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. (எ)

## மன்னாரை மாநகரசபையாக தரமுயர்த்துமாறு அவசர கடிதம்

மன்னார், ஏப்.4

மன்னார் நகரசபையை மாநகரசபையாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளபோதும், இன்னமும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு நேற்றுத் திங்கட்கிழமை அனுப்பியுள்ள அவசர கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-213-60)

## அனைத்து விவசாயிகளிடமும் நெல்லைக் கொள்வனவு செய்க

### முல்லை விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அனைவரிடமும் அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கிலோ 100 ரூபாவுக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதாக அறிவித்து, கமநலசேவை நிலையம் ஊடாக ஒரு விவசாயியிடம் இருந்து 5 ஆயிரம் கிலோ வரையிலேயே நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. பல விவசாயிகள் நெல்லைக் காயவைத்து நல்ல விலைக்கு விற்கமுடியாமல் வீடுகளில் அடுக்கி வைத்துள்ளனர்.

கமநலசேவைத் திணைக்களம் குறிப்பிட்ட சில விவசாயிகளிடமே நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது. தனியார் நிறுவனங்கள் நெல்லை கிலோ 88 ரூபாவுக்கு கொள்வனவு செய்து வந்தாலும் பல விவசாயிகளிடம் நெல் காணப்படுகின்றது. எனவே தம்மிடமுள்ள நெல்லை அருகிலுள்ள கமநலசேவைகள் நிலையம் ஊடாக அரசாங்கம் கொள்வனவு செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-19)




**தலையிடிக்கு பனடோல் வாங்கவெண்டு வந்தவருக்கு, பொழுதுபோக்கா ஆழ்கடலில போய் தூண்டிலில மீன்பிடிச்சால் தலையிடி மாறுமெண்டு மண்டையைக் கழுவி தூண்டில், படகு, படகைக் கொண்டு போற வாகனம், நீச்சல் உடுப்பு எண்டு கடையில இருந்த எல்லாத்தையும் வித்த வியாபாரியின்ர கதையைக் கேள்விப்பட்டிருப்பியள். கிட்டத்தட்ட அப்பிடியொரு சம்பவம் ரண்டொரு மாசத்துக்கு முந்தி வவுனியாவில நடந்திருக்கு.**

**அங்க உள்ள ஒரு பெண் படைப்பாளி, தன்ர புத்தகமொண்டை வெளியிட நினைச்சிருக்கிறா. அதுக்காக அங்க உள்ள ஓர் அமைப்பின்ர மண்டபத்தைக் கேக்க போயிருக்கிறா. ஆனால் மண்டபம் கேக்கப்போன இடத்தில அதுக்குப் பொறுப்பான அமைப்பின்ர தலைவர், சில கெண்டிசன் போட்டிருக்கிறார். நான் தான் தலைமை வகிக்கோணும், எங்கட அமைப்பைச் சேர்ந்த லெக்சர்தான் விருந்தினரா வரவேணும். நிகழ்ச்சித் தொகுப்பும் எங்கட ஆள் தான் செய்யவேணும். அப்பிடியெண்டா எங்கட அமைப்பே வெளியிடுறமாதிரி இருக்கும், உங்களுக்கும் உங்கட புத்தகத்துக்கும் மதிப்பாயிருக்கும். எங்கட அமைப்பின்ர விழா எண்டால் சனமும் நிறைய வரும் எண்டு சொல்ல, அந்தப் படைப்பாளிக்கு தலை கிறுகிறுத்துப் போட்டுது. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் என்ன முடிவு சொல்றதெண்டு குழம்பி, கடைசியில எப்பிடியாவது புத்தகத்தை வெளியிட்டால் சரி எண்ட நினைப்பில, அந்த அமைப்பின்ர முடிவுக்கு ஓமெண்டிட்டா.**

**புத்தக வெளியீட்டு விழா அந்த அமைப்பின்ர திட்டப்படிதான் நடந்தது. ஒரு புத்தக வெளியீடு எண்டால் மேடையில பேசுறவை ஒண்டில் புத்தகத்தைப் பற்றிப் பேசுவினம் இல்லாட்டி அதை எழுதின ஆளைப்பற்றிப் பேசுவினம். ஆனால் இஞ்ச நடந்ததோ வேற. விழாவுக்குத் தலைமை தாங்கினவர், தங்கட அமைப்பைப் பற்றியும், அது என்னென்ன செய்தது, இனியென்ன செய்யப்போகுது எண்டும் ஒருபாட்டம் சொல்லி முடிச்சிட்டு பிறகு விருந்தினர் பக்கம் திரும்பினார். விருந்தினரா வந்தவரும் அவையின்ர அமைப்புக்காரர்தானே. அதால அந்த விருந்தினரைப் பற்றி இன்னொரு அரை மணித்தியாலம் புகழ் மாலை பாடிமுடிச்சிட்டு, கடைசியா 'இந்தப் புத்தகத்தை வெளியிடுறதில மகிழ்ச்சி' எண்டமாதிரி பேச்சை முடிச்சார். சரி, விருந்தினராவது புத்தகத்தைப் பற்றி பேசுவாரெண்டு பாத்தால், அவர் தன்னைத் தலைவர் புகழ்ந்ததுக்கு நன்றிக்கடனா தானும் பதிலுக்கு அவரைப் புகழ்ந்து ஓவரா ஐஸ்வைச்சு குளிரப்பண்ணிப்போட்டுப் போய் கதிரையில இருந்திட்டார். ஒப்புக்கு இடைக்கிடை புத்தகத்தைப் பற்றிச் சொன்னாலும், அதுவும் ஏனோதானோ எண்டு சொல்லிட்டு, விழாவின்ர தலைவரைப் புகழ்றதில மட்டும் கண்ணாயிருந்தார். இப்பிடி 'நீ என்னைப் புளுகு, நான் உன்னைப் புளுகிறன்' எண்ட கணக்கில அவை ரண்டுபேரும் பேசியே விழாவின்ர முக்கால்வாசி நேரத்தை விழுங்கிட்டினம். விழாவுக்குப் போனவைக்கு இப்பிடி இவை ஆளையாள் புகழ்றதைப் பாக்கவோ வந்தம் எண்டமாதிரிப் போச்சுது.**

**அதோட அந்த அமைப்புச் சொன்னமாதிரி சனமும் அள்ளுகொள்ளையா வரேலை. புத்தகத்தை எழுதின படைப்பாளிக்கு தெரிஞ்ச ஆக்கள் மட்டும் தான் வந்தவை.**

**இப்பிடி ஆரோ ஒரு படைப்பாளியின்ர காசில தங்கட அமைப்புக்கு விழா எடுத்து பொச்சம் தீர்த்திருக்குது அந்த இலக்கிய அமைப்பு. இப்பிடி இவையள் மாறிமாறி முதுகுசொறிய அப்பாவிப் படைப்பாளிகளின்ர காசும், விழாவும் தான் உவைக்கு கிடைச்சுதோ எண்டு அந்த நிகழ்வுக்கு போனவை புறுபுறுத்தது.**

**அந்த அமைப்புக்காரருக்கும் கேட்டிருக்கும். ஆனாலும் அவைக்கு உதெல்லாம் பழகியிருக்கும் கண்டியளோ.**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவன்சா நாட்டில் தீவிரம்

## குழந்தைகள் அவதானம் என்று மருத்துவர் தீபால் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப். 4**

**நாட்டில் இன்புளுவன்சா ஏ மற்றும் பி ஆகிய இரண்டு நோய்கள் பரவி வருகின்றன. பிள்ளைகளின் உடல்நிலை தொடர்பில் பெற்றோர் அவதானம் செலுத்தவேண்டும் என ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.**

கடந்த சில நாள்களாக மருத்துவமனையில் சேர்க்கப்படும் குழந்தைகளில் இந்த நோய் அறிகுறி கண்டறியப்பட்டுள்ளது.

இருமல், காய்ச்சல் அல்லது சளி உள்ளிட்டவை மூன்று நாள்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும்.

இதேவேளை 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள், சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த நோய்க்கு உடனடியாக சிகிச்சை பெறவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## மாணவன் தண்டிக்கப்பட்ட விவகாரம்;

# சரீர ரீதியான தண்டனை சட்டத்துக்கு முரணானது

## மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பாடசாலை அதிபர் விளக்கக்கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவருக்கு சரீர ரீதியாக வழங்கப்பட்ட தண்டனை சட்டத்துக்கு முரணானது என்பது கண்டறியப்பட்டுள்ளது என்று அந்தப் பாடசாலையின் அதிபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு எழுத்துமூல விளக்கத்தை வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவன் தண்டிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தால் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின்படி விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு, மாணவன் தண்டிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்திடம் விளக்கம் கோரியிருந்தது.

அது தொடர்பாக பாடசாலை அதிபர் அனுப்பியுள்ள விளக்கக்கடிதத்தில் சம்பவம் தொடர்பாகவும், தன்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மாணவனைத் தண்டித்த ஆசிரியர் பகுதித் தலைவராகவும், ஒழுக்காற்றுக் குழு உறுப்பினராகவும் செயற்படுவதுடன், கடந்த காலங்களில் தனது கடமைகளை நேர்த்தியாகச் செய்துள்ளார் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நடந்த சம்பவத்தில் மாணவர் சரீர ரீதியாகத் தண்டிக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணாகவும், மாணவர் நலனுக்கு முரணாகவும் இருப்பது கண்டறியப்பட்டது. மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் பகுதித் தலைவரும், உபதலைவரும் மருத்துவமனைக்குச் சென்று மாணவனைப் பார்வையிட்டுள்ளனர்.

இந்த விடயம் சட்ட மீறலாகவும், நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதும் பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும் மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பகுதித் தலைவர் அழைக்கப்பட்டு, எந்தக் காரணத்துக்காகவும் மாணவர்களுக்கு சரீரத் தண்டனை வழங்கக்கூடாது என்ற தாபன விதிக் கோவையின் பிரமாணத்துக்கு அமைய எச்சரிக்கை வழங்கப்பட்டது என்று அதிபர் விளக்கக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விளக்கக் கடிதத்தின் பிரதி கல்வி அமைச்சுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-20)

## கோழி இறைச்சி
# 260 ரூபாவால் விலை உயர்வு!

கொழும்பு, ஏப். 4

கோழி இறைச்சியின் விலை சந்தையில் 260 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கோழி இறைச்சியின் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. (ச-இ)

## 3 மில்லியன் பலாக்கன்றுகள்
# நடுகை!

கொழும்பு, ஏப். 4

நாடு முழுவதும் 3 மில்லியன் பலா மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைத்தார்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் பலா சார்ந்த உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பலா சார்ந்த உணவு உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் நோக்கிலும் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த வருடத்தில் மாத்திரம் 70 ஆயிரம் பலாமரக் கன்றுகளை நடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 4

வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகிலுள்ள சைவ பரிபாலனசபை மண்டபத்தில் தலைவர் யோ.கேமநளினி தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து மாவட்ட உறுப்பினர்களையும் கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஓ-14)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** முயற்சியில் வெற்றி கிடைக்கும் நாள். உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் இனி விலகுவர்.

**இடபம்:** பிரச்சினைகளிலிருந்து விடுபடும் நாள். பிள்ளைகள் வழியில் நல்ல செய்தி வந்து சேரும். தொழில் தொடங்குவதற்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**மிதுனம்:** கொடுத்த தொகை குறிப்பிட்டபடி வந்து சேரும் நாள். குடும்பச்சுமை கூடும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துகளை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர்.

**கடகம்:** தொடரும் வெற்றிகளால் துணிவு கூடும் நாள். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் வழியில் உள்ளம் மகிழும் செய்தியொன்று வந்து சேரும். மனக்குழப்பம் அகலும்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவம் நடைபெறும் நாள். பகல் இரவாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**கன்னி:** அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. நேற்று செய்யாமல் விட்ட வேலை ஒன்றால் அவதிப்பட நேரிடும்.

**துலாம்:** தடைகள் அகலும் நாள். தாராளமாகச் செலவிட்டு மகிழ்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பேச்சில் இனிமை கூடும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் நாள். எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** எதிரிகள் விலகும் நாள். எதிர்பார்த்தபடியே நல்ல காரியங்கள் நடைபெறும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** எதிரிகள் விலகும் நாள். எதிர்பார்த்தபடியே நல்ல காரி யங்கள் நடைபெறும். தொழில் ரீதி யாக புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்:** நெருக்கடி நிலையைச் சமாளிக்க நிதியுதவி கேட்கும் நாள். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் கைகூடும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மீனம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வர். உத்தியோகத்தில் சக பணியாளர்கள் உங்கள் வேலையைப் பகிர்ந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய சட்டவரைவும் பயமுறுத்தல்களும்

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் கூர்ந்து நோக்கப்படவேண்டியவை. புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிட படுமோசமானது என்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வரும் நிலையில், சட்டத்தை எதிர்ப்பவர்களை அச்சுறுத்தும் வகையில் அவரது கருத்துக்கள் அமைந்துள்ளன. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு பல தரப்புக்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. தென்னிலங்கையிலும் இதற்கான எதிர்ப்பு இம்முறை வலுத்துள்ளது. எதிரணிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்துவோம் என்றும் தெரிவித்துள்ளன. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அரசுக்கு எதிராக அறவழியில் போராடுபவர்கள்கூட பல ஆண்டுகள் சிறையிலடைக்கப்படும் அபாயம் இருக்கின்றது என்றும் கருத்துச் சுதந்திர வெளியை முற்றாக இல்லாமற் செய்யப்போகின்றது எனவும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் சிங்களக் கடும்போக்காளரான குணதாச அமரசேகர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஆகியோரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். சர்வதேச சட்டத்தரணிகள் அமைப்பு உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்தும் இந்தச் சட்டத்தை கைவிடுமாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவற்றை ரணில் – ராஜபக்ச அரசாங்கம் உள்வாங்கப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கிளர்ச்சியாளர்களின் வெறியாட்டத்தை ஒடுக்கவே இந்தச் சட்டவரைவு கொண்டு வரப்படுவதாகவும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்னரே, அதில் என்ன விடயம் இருக்கின்றதெனத் தெரியாமலேயே எதிர்க்கட்சியினர் கூப்பாடு போடுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இதற்கு ஒரு படிமேலேபோய், 'எதிர்காலத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளவர்களே தற்போது இந்தப் புதிய சட்டவரைவு தொடர்பில் கலக்கம் கொண்டுள்ளனர். பயங்கரவாதச் செயற்பாடுகளில் எவரும் ஈடுபடாவிட்டால் முன்மொழியப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கண்டு அச்சமடையத் தேவையில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பை இந்தச் சட்டம் உறுதிப்படுத்தும்' என்று குறிப்பிட்டுள்ளார்.


இந்தச் சட்டவரைவை எதிர்ப்பவர்களை மறைமுகமாகப் பயங்கரவாதிகள் என்று நீதி அமைச்சர் நிறுவமுற்படுகின்றார். இதன் ஊடாக அவர் சூசகமான எச்சரிக்கையையும் அவர்களுக்கு விடுத்துள்ளார். 'புதிய சட்டவரைவை எதிர்த்தீர்கள் என்றால் உங்களையும் பயங்கரவாதிகள் என்று முத்திரைகுத்தி சிறையிலடைப்போம்' என்பதையே நீதியமைச்சர் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிக மோசமானது என்று சொல்லப்படும் நிலையில், அந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட முன்னரே அதைக்காண்பித்து நீதி அமைச்சர் மிரட்டும் தருணத்தில், அப்படியானதொரு சட்டம் நிறைவேற்றப்பட்டால் நிலைமை என்னாகும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமே மிக மோசமானது என்று கருதப்படும் நிலையில், அதன் பிரயோகத்தின் ஊடாகவே பல ஆண்டுகள் எந்தக் குற்றமும் செய்யாது சிறைவாசம் அனுபவிக்கும் சூழலில், அதைவிட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்தியே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டங்களை அடக்கி ஒடுக்கி வருகின்றார். அப்படியான ஒருவருக்கு பல்லக்கில் வைத்து தூக்கிக்கொடுப்பதைப்போன்று அதிகாரங்களை மேலும் வழங்கினால் நிலைமை என்னவாகும்? இந்தச் சட்டவரைவை எதிர்த்து நீதிமன்றத்தின் ஊடாக சட்டப்போராட்டம் நடத்துவது மாத்திரமல்லாது, வீதியில் இறங்கியும் போராடவேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

"பொய்யான விடயத்தை அறவே பேசாதீர்கள். உண்மையானதையும், பயனுள்ளதையும் மட்டுமே பேசுங்கள்"

– புத்தர்




# தீவுகளை ஒன்றிணைக்கும் புதிய அதிகாரசபை விரைவில்

## தமிழர்களுக்கு மற்றொரு தலையிடி என்கிறார் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

**யாழ்ப்பாணம், ஏப். 4**

**மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை போன்று வலுவான அதிகாரங்களுடன் இலங்கையிலுள்ள அனைத்து தீவுகளையும் ஒன்றிணைத்து அதிகாரசபை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.**

திருநெல்வேலியிலுள்ள தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தெரிவிக்கையில்,

மகாவலி அதிகாரசபையைப்போன்று இலங்கையிலுள்ள 115 தீவுகளையும் ஒன்றிணைத்து வலுவான அதிகாரசபை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வடக்கிலுள்ள நெடுந்தீவு, கச்சதீவு போன்ற பல தீவுகளும் உள்வாங்கப்படும். தற்போது மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை எவ்வாறு மாகாணசபையையும், மாவட்டச் செயலகங்களையும், பிரதேசசெயலகங்களையும் மீறி ஆதிக்கம் செலுத்தும் சபையாக இயங்குகின்றதோ அதேபோன்று தீவுகளை ஒன்றிணைத்து அமையும் அதிகாரசபையும் செயற்படும் - என்றார். (ஒ-இ)

*மாகாண பொலிஸ் இல்லாவிடின்*

# மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்பை எப்படி நடைமுறைப்படுத்துவது?

மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை - கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவாவது மாகாண பொலிஸ் அதிகாரங்கள் கட்டாயம் தேவை என்று ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்களுக்கான தீர்வாக நாம் ஏற்கவில்லை. ஆனால் அரசியல் ரீதியான தேவைப்பாடுகளுக்காக அதை நாம் ஏற்றுக்கொண்டதாக சிலர் பரப்புரை செய்கின்றனர். தமிழ் மக்களின் குறைந்தபட்ச இருப்புக்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு 13 ஆவது திருத்தம் அவசியம். தமிழர் தாயகத்தில் தொல்லியல் திணைக்களத்தால் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வரலாற்றை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் குருந்தூர்மலையில் கட்டுமானங்களை முன்னெடுக்க நீதிமன்றம் தடைவிதித்திருந்தது. அதையும் மீறி கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டபோது பொலிஸார் அதற்கு ஒத்துழைத்துள்ளனர். நீதிமன்றத்தின் கட்டளையை மீறும் இடங்களில் நடவடிக்கை எடுப்பதற்காக மாகாணத்துக்கு பொலிஸ் படை தேவை. இதன் ஊடாக நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படும். தமிழ் மக்களின் இருப்புக்களை ஓரளவாவது பாதுகாக்கலாம் - என்றார். (ஒ-இ)

நாளை

05.04.2023

புதன்கிழமை

பங்குனி 22

சுபநேரம் : 04.39 - 06.09

ராகுகாலம் : 12.09 - 01.39

பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**தோற்றம் 1956 ✦ 06 ✦ 27**

**மறைவு 2023 ✦ 04 ✦ 01**

## திருநாவுக்கரசு பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் **திருநாவுக்கரசு பஞ்சலிங்கம்** அவர்கள் (01.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு தவமணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் மனோன்மனி தம்பதிகளின் மருமகனும், பவானியின் அன்புக்கணவரும், சரஸ்வதி, மகாலிங்கம், கணேசலிங்கம் (சுவிஸ்), யோகேஸ்வரி (டென்மார்க்), சாந்தி, ராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தலிங்கம் மற்றும் சத்தியலிங்கம் (கனடா), தனலட்சுமி, தவபாக்கியலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரரும், சௌந்தரராஜன், பசுங்கிளி (சுவிஸ்), பாலகிருஸ்ணன் (டென்மார்க்), நடேஸ்வரன் (பிரான்ஸ்), சுதர்சினி (கனடா), கந்தசாமி, அம்பிகைபாலன், சாமுண்டீஸ்வரி, கணேசலிங்கம் (சுவிஸ்), வசந்தி, ஜெயந்தி, தர்மசீலன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கிரிதரன் (சுவிஸ்), நித்தியமலர், ரகுதரன், கரிதரன் (கனடா), தேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனரூபி, கோகுலசுதன்(தேசிய வீடமைப்பு அதிகார சபை, வவுனியா), சுரேஸ் ஆகியோரின் மாமனாரும், சனுஸ்கா, அர்ஷியா, கிருத்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2023) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சோமசுந்தரம் வீதி,**
**ஆனைக்கோட்டை**

**தொடர்புகளுக்கு:**
**0773455416**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 28 . 09 . 1936



**மறைவு** 03 . 04 . 2023

## கனகசபை சண்முகலிங்கம்

**(இளைப்பாறிய காசாளர், பல நோ.கூ.ச. கொடிகாமம்)**

அல்லாரை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கனகசபை சண்முகலிங்கம் நேற்று (03.04.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கற்பகப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், இராகுலன் (கனடா), அகிலன் (கனடா), காலஞ்சென்ற அரவிந்தன் (இலண்டன்) மற்றும் சண்சுதர்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநாயகி, வள்ளிநாயகி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நந்தினி (கனடா), ஆனந்தி (கனடா), சசி (இலண்டன்), வாணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகன், நிரூஜன், பிரவீன், பிரியங்கா, வார்சிகன், யதுர்சிகன், கபிசன், அனுசன், சந்தியா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR/39591)AH-1

**இராகுலன் - 0016 475 69 9036, அகிலன் - [illegible]**
**சண்சுதர்சன் - 0061 405 101932**

# மரண அறிவித்தல்



## பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் பாலசுப்பிரமணியக் குருக்கள்

**(முன்னாள் பிரதம குரு – சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் தேவஸ்தானம் மொறிசியஸ்)**

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், மொறிசியஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜ ஐயர் பாலசுப்பிரமணியக் குருக்கள் நேற்றுமுன்தினம் (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை மொறிசியசில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அனலைதீவு, புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலய பிரதம குரு நடராஜ ஐயர் ருக்குமணி அம்மாவின் அன்பு மகனும், நீராவியடி பாலசுப்பிரமணியக் குருக்கள் சீதாலட்சுமி அம்மாவின் மருமகனும், கிரிராஜ கன்னிகாம்பாளின் அன்புக் கணவரும், புவனேஸ்வரியின் பாசமிகு தந்தையும், சதாசிவ ஐயர், தாமோதரக்குருக்கள், நாகேஸ்வரி, காலஞ்சென்ற கணேசராஜக் குருக்கள், அகிலேஸ்வரக்குருக்கள் (மொறிசியஸ்), ஸ்ரீதரக்குருக்கள் (மொறிசியஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நகுலேஸ்வரசர்மா, வல்லவாம்பிகை ஆகியோரின் அன்பு அத்தானும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.04.2023) திங்கட்கிழமை மொறிசியஸ் நாட்டில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.112, கி.வி.திட்டம்,**
**திருநெல்வேலி.**
**071 829 3766, 021 222 3828**

**தகவல்:**
**ந. சதாசிவ ஐயர்**
**சகோதரன்**

(CR/39590)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Royal College Of Jaffna**
தனியார் கல்வி நிலையம், பிரான்பற்றுவீதி, சங்கானை. (பழைய மீன் சந்தை அருகில்)
ஆங்கில, சிங்கள, கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள். ஒரு பிரிவில் கூடியது 15 மாணவர்கள். தனித்தனிக் கவனம். அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவை.
**077 675 1649**

**விற்பனைக்குண்டு**
நல்ல நிலையிலுள்ள இரண்டு கொண்டல் கொட்டு மிருதங்கங்களும் 02 2set, 4 set ஆர்மோனியங்களும் விற்பனைக்குண்டு.
**077 995 5588** (CS/24285) AH-1

# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 01.01.1942



மறைவு 16.03.2022

## கனகலிங்கம் சிவக்கொழுந்து

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவே!
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம்
எம்வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்

சிறுப்பிட்டி வடக்கு,
மடத்தடி.

(CS/24228)AH-1

நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1958



மறைவு 29 . 03 . 2023

## ஆறுமுகம் வரதராஜசிங்கம்

**(யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம். பழைய மாணவன், Charterd certified Accountant (FCCA))**

உடுவில் கிழக்கு, அம்பலவாணர் வீதியை பிறப்பிடமாகவும் **Worcester Park United Kindom** ஐ வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் வரதராஜசிங்கம் (கணக்காளர் U.K) கடந்த (29.03.2023) புதன்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் முத்தம்மாவின் அருமை மருமகனும், சுமித்திராவின் (கணக்காளர்- லண்டன்) பாசமிகு கணவரும், கவிதா (வைத்தியர் - லண்டன்), கபிலன் (Solicitor - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் குலேந்திரசிங்கம் (வைத்தியர்), கலாநிதி மகேந்திரசிங்கம் (U.K), கேந்திரராணி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கோபாலசிங்கம் (பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரனும், இராஜேஸ்வரி, கலாநிதி சாந்தினி (U.K), கருணாகரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2023) புதன்கிழமை Putney Vale Cemetery and Crematorium இல் நடைபெறும்.

இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**+44 770 2908 990**

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(CS 2424..A-1)

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 05 . 1932



இறப்பு 31 . 03 . 2023

## செல்லத்துரை - செல்வராஜா

யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதியைப்பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வராஜா அவர்கள் கடந்த (31.03.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- தங்கரத்தினம் தம்பதியரின் புதல்வனும், கால்ஞ்சென்ற சிவலிங்கப்புளியடியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை - தில்லையம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அழகேஸ் வரியின் அன்புக் கணவரும், சந்திரவதனா (பிரான்ஸ்), சாந்தினி (சுவிஸ்), ஜெயந்தினி (கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை - ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராஜா (பிரான்ஸ்), கணேசலிங்கம் (கமல்-சுவிஸ்), இரத்தினகோபால் (கிராம அலுவலர், கொக்குவில் வடகிழக்கு J/121) ஆகியோரின் அன்பு மாமனாரும், முரளி, ஜஸ்வினி, தர்ஷிகன், யாதவன், லக்ஷ்மிகன், யதுர்சன், சஞ்சுதன், சஜீவ் ஆகியோரின் பேரனும், அதர்வாவின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான செல்வகாந்தராஜா, செல்வராணி, யோகேஸ்வரி மற்றும் தங்கராணி, புஸ்பதேவி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகேஸ்வரி, யோகநாதன், ஜெகநாதன் மற்றும் கயிலைநாதன், இராமநாதன், தில்லைநாதன், சர்வேஸ் வரி, அற்புத நாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2023) வியாழக்கிழமை பிரான்ஸில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 9235 519** ஜெயந்தினி

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24305) A-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சித்திவிநாயகமூர்த்தி பகவதியம்மா

மல்லாகம் காளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உடுப்பிட்டியைச் சேர்ந்த சித்திவிநாயகமூர்த்தி பகவதியம்மா அவர்கள் நேற்று (03.04.2023) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், சித்திவிநாயகமூர்த்தி (அமரர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவாஸ்கரன், ரதிபாஸ்கரன் (கனடா), ஜெயபாஸ்கரன், கர்ணபாஸ்கரன் (கனடா), நகுலபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலதி, ஜெயமணி, சசிகலா, லிங்கேஸ்வரி, சந்திரிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜகீர்த்தனா, மீரஜா, டிலானி, நிலக்ஷன், நிரோஜன், கரிகரன் (கனடா), செந்தூரன் (கனடா), அரவிந் (கனடா), மிதிலா, குணாளன், சஞ்சீவ் (கனடா), சயந் (கனடா), சாருஜா, நிமேதிகா, அஜந்தன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2023) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, மதியம் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 4725 877**
**077 67 222 62**
**076 983 1838**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24301) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களை நெறிப்படுத்த நடவடிக்கை!

## வடக்கு ஆளுநர் அலுவலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4

**வடக்கு மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் கடந்த மார்ச் 19ஆம் திகதி நிறைவுக்கு வந்த பின்னர், அவற்றை நெறிப் படுத்தும் விதமாக சில சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் வடமாகாண ஆளுநர் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மாகாணசபையொன்று இல்லாத காலப்பகுதியில் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரது நிறை வேற்றுக் கடமைகளையும் ஆற்றிவரும் ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்கள் சபைகள் இல்லாத காலங்களிலும் இடையறாத பொதுமக்கள் சேவை களை வழங்கவேண்டுமென அறி வுறுத்தியுள்ளார்.

இதற்காக மாநகர ஆணையாள ரும் சகல சபைகளின் செயலாளர்க ளும் மிகக் கவனமாகப் பணியாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களிடமிருந்து கூடு தலான கண்காணிப்பு நடவடிக்கை களையும் எதிர்பார்ப்பதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் உடன்நடைமுறைக்கு வரும் வகையில், சபை வருமானங் கள் குறித்து சபை செயலாளர்க ளுக்கு இலக்குகள் வழங்கப்பட்டு அவர்களது வருடாந்த செயலாற் றுகை மதிப்பீடலில் உள்வாங்கப்பட் டுள்ளது. உள்ளூராட்சி ஆணையா ளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களின் ஆய்வு உத்தியோகத்தர்கள் சபைக ளின் செலவினங்கள் தொடர்பான கண்காணிப்புக்காகவும் அறிக்கை யிடலுக்காகவும் தொடர்ச்சியான பயணங்களை மேற்கொள்ளவுள் ளார்கள். அத்துடன் சகல உள் ளூராட்சி மன்றங்களின் தினசரி வருமான செலவினங்கள் இணை யத்தின் மூலம் கணக்காய்வு செய் யப்படவுள்ளது.

சபைகளின் காலாந்தரமான வரு மான செலவின பகுப்பாய்வுகள் கணினிமயப்படுத்தப்படும்.

சபைகள் தங்களது மூலதன மற் றும் நானாவித செலவினங்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பாதீட் டுக்கு இணங்க மேற்கொள்வது கண்காணிக்கப்படும். வெளிநாட்டு நிதி வழங்கலுடனான செயற்றிட் டங்கள் ஆளுநரின் நெருங்கிய கண்காணிப்புக்குட்படுத்தப்படும். சபைகள் தங்களது வருமான மிகைகளிலிருந்து நிதி தேவைப்ப டும் சபைகளுக்கு இலகு கடன்கள் பெறுவது வசதிப்படுத்தப்படும்.

எல்லாச் சபைகளுக்கும் மாதத்தில் ஓர் பொதுவான நாள் குறிக்கப்பட்டு அந்நாளில் திறந்த அபிருத்திக் கலந்துரையாடலுக்காக பொதுமக் கள் அழைக்கப்படுவார்கள். அதில் வசதிப்படுத்துநர்களாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருப்பார்கள் - என்றுள்ளது. (ம)

# ஊழலுக்கு எதிரான சட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கும்

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 4

ஊழலுக்கு எதிரான எந்தவொரு சட்டத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கும் என்று அதன் பொதுச் செய லாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழலுக்கு எதிராக மிகச்சிறந்த சட்டத்தைக் கொண்டு வரவுள்ளதாகவும் அது ஆசியாவிலேயே மிகச்சிறந்த சட்டமாக இருக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சட்டவரைவு ஐக்கிய மக்கள் சக்தியினரா கிய நாங்கள் கடந்த மே மாதமே முன்வைத்தோம். ஆளும் தரப்பாக இல்லாததால், தனிநபர் பிரேரணை யாக அதனைத் தாக்கல் செய்தோம்.

நாங்கள் கொண்டு வந்த சட்டவரைவுகள் தொழிற்சங் கங்களை நசுக்கும் விதமாகவோ அல்லது இளைஞர் களைக் கைது செய்யவோ அல்லது மக்களின் அடிப் படை உரிமைகளைச் சீர்குலைக்கும் வகையிலோ அமைந்திருக்கவில்லை. அரசு கொண்டுவரவுள்ள ஊழ லுக்கு எதிரான சட்டவரைவு திருடர்களைப் பிடிப்பதி லேயே நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். திரு டர்களுடன் இருந்துகொண்டு ரணில் விக்கிரமசிங்க வால் இதனை எவ்வாறு மேற்கொள்ளமுடியும்.

ஊழல் அதிகம் இருந்ததால்தான் இந்த நாடு வங்கு ரோத்து நிலைக்கு வந்தது என்பதை நாம் அறிவோம். தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தில் பெருமள வான வழக்குகள் குவிந்து கிடக்கின்றன. இந்தச் சட்ட வரைவை நிறைவேற்றினாலும் அரசால் எந்த நட வடிக்கையும் எடுக்கமுடியாது - என்றார். (ம-22)

# மாணவி மீது துஷ்பிரயோகம்; அதிபருக்கு 30 வருட சிறை!

கொழும்பு, ஏப். 4

பாடசாலை மாணவியை துஷ்பிரயோகம் செய்த குற் றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அதிபருக்கு 30 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து பலப்பிட்டிய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பலாங்கொடையிலுள்ள பாடசாலையொன்றின் முன்னாள் அதிபருக்கே இந்தத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டில் 16 வயதுடைய பாடசாலை மாணவியை வன்புணர்வுக்குட்படுத்தியமை தொடர் பில் பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபர் 3 குற்றச் சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீண்டகால விசாரணையின் பின்னர் தீர்ப்புக்காக நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட் டது. இதன்போதே ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 10 ஆண்டுகள் வீதம் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச)



சிங்கர் நிறுவனத்தின் 50ஆவது புதிய கிளை யாழ்ப் பாணம் மருத்துவமனை வீதியில், கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சிங்கர் நிறுவனத்தின் பிரதம நிறை வேற்று அதிகாரி துஷாந்த் அமலசூரிய, நிறுவன முகாமையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ச-26)

# இடைவிலகிய மாணவர்களுக்கு உயர்கல்வித் தகைமை கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 4

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரக் கல்வித் தரத்திலிருந்து இடைவிலகிய வடக்கு மாகாண மாணவர்கள் தொழில் தகைமைச் சான்றி தழ் பெறும் வகையில் இரண் டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்.உயர்கல் விக் கண்காட்சி கடந்த சனிக் கிழமை யாழ். தனியார் விடுதி யொன்றில் இடம்பெற்றது.



வடக்குமாகாணக் கல்விய மைச்சு, யாழ். இந்தியா துணைத் தூத ரகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செய லாளர் உமாமகேஸ்வரன், கௌரவ விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் பதில் துணைத்தூதுவர் ராம் மகேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு துறைசார்ந்த வழிகாட் டல் ஆலோசனைகள், பாடவிதானம் சார்ந்த கற்கைநெறி விளக்கங்கள் உள் ளிட்டவை துறைசார்ந்தோரால் வழங் கப்பட்டன. (ச)

# போஷாக்கு கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.4

கர்ப்பிணித் தாய்மார் களின் போஷாக்கை மேம்படுத்தும் நோக் கில் யாழ். அச்சுவேலி பிரதேச மருத்துவ மனையில் 'குருதிச்சோ கையை நிவர்த்தி செய் தல்' எனும் தொனிப் பொருளில் கண்காட்சி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் அச்சுவேலி பிர தேச மருத்துவமனை ஆகியவற்றின் ஏற்பாட் டில் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது. (ச-20)

# காங்கேசன்துறை – காரைக்கால் படகுச்சேவை இந்திய அமைச்சின் அனுமதி இன்னுமில்லை

யாழ்ப்பாணம், ஏப். 4

காங்கேசன்துறை - காரைக்கால் இடையிலான படகுச்சேவையை, திட்டமிட்டபடி இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு, இந்திய அமைச்சு இன்னமும் அனு மதிக்கவில்லை என்றும், அனுமதி கிடைத்ததும் படகுச் சேவையை முன்னெடுப்பதில் சிக்கல்கள் இருக்காது என்றும் இந்தப் படகுச்சேவை நிறுவன அதிகாரி நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித் துள்ளார்.

இலங்கையில், பயணிகள் வந்து இறங்குமிடம், குடிவரவு, குடிய கல்வு அலுவலகம், சுங்க அலுவ லகம் ஆகியவை அமைக்கப்பட் டுள்ளன.

இந்தக் கட்டடங்களில் தற்போது கடற்படையினர் தங்கியுள்ளனர்.


2016ஆம் ஆண்டு 46 மில்லி யன் ரூபா இந்திய நிதியுதவியில் காங்கேசன்துறை துறைமுகப் புனரமைப்பு பணிகள் ஆரம்ப மாகின. பெரிய கப்பல்கள் நங் கூரமிடுவதற்கு ஏதுவாக மேலும் 16 மில்லியன் ரூபா செலவில் துறைமுகம் ஆழமாக்கப்பட்டது.

வாரத்தில் ஆறுநாள்கள் படகுச் சேவை இடம்பெறுமெனவும் 120 பயணிகள் பயணிக்க முடியும் என்றும், ஞாயிற்றுக்கிழமை களில் சேவை இடம்பெறமாட்டாது என்றும் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 02 . 1943



இறப்பு 03 . 04 . 2023

## பேரம்பலம் பரஞ்சோதிநாதன்

(ஓய்வுபெற்ற Quantity Surveyor)

பேரம்பலம் அவெனியு, சங்குவேலி - மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பு மூர் றோட்டை வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலம் பரஞ்சோதிநாதன் அவர்கள் நேற்று (03.04.2023) திங்கட்கிழமை சங்குவேலியிலுள்ள தனது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் - நாகரத்தினம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லைநாதன் - பஞ்சரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவி அவர்களின் அன்புக் கணவரும், பார்த்தீபன், சிவகாமியின் பாசமிகு தந்தையும், ராஜன், வைஷ்ணவியின் அன்பு மாமனாரும், தனுஷ், கௌதம், விக்னேஸ், பிரணவ், கார்த்திக் ஆகியோரின் பாசமிகு பேரனும், பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான யுகவதி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சண்முகரத்தினம், பாலேந்திரன் மற்றும் அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சோமசேகரன் மற்றும் விஜயசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான் லோகாம்பாள், நவரட்ணம், வன்னியசிங்கம், பாலசுந்தரம், ரட்ணேஸ்வரன், ராசமனோகரன் மற்றும் விமலாதேவி, விக்னேஸ்வரன், நவரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2023) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானம் மானிப்பாயில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பேரம்பலம் அவனியு, சங்குவேலி, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 911 2840**

(CS 24307) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1937



மறைவு 03 . 04 . 2023

## செல்லையா நல்லம்மா

யாழ். மிருசுவில் வடக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லையா நல்லம்மா அவர்கள் நேற்று (03.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், பசுபதிநாதன், முருகானந்தம், சரோஜினிதேவி, சாரதாதேவி, விஜயகுமாரி, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவமலர், சிவமலர், அமரர் சிவநேசன் அமிர்தலிங்கம், நரேந்திரன், அகிலராஜா ஆகியோரின் மாமியாரும், அமரர் பொன்னுத்துரை, செல்வரட்ணம், சிவபாக்கியம், வேலாயுதப்பிள்ளை, கைலாயப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், வள்ளிப்பிள்ளை, செல்வேஸ்வரி ஐயம்பிள்ளை, பூபதி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், கர்சன்- பபிதா, றஜீவன் - சோபிதா, பவித்திரன், வேணுகாணன், வேணுகா ஆகியோரின் அப்பம்மாவும், சுபாஸ்கரன் - சர்ணியா, சாருஜன் - கிரிசாளினி, அஜீவன், பிருந்தாவன், பிரணவன், அபிநயா, அனோஜன், அதிசஜா ஆகியோரின் அம்மம்மாவும், கேஷவ், ஆயுசி, ஸ்ரீபிரணவி, அபிணவி, சிவானன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மிருசுவில் வடக்கு பெரியானோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மிருசுவில் வடக்கு, மிருசுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 243..) A-1



வரலாற்றுச் சிறப்புமிக்க தென்மராட்சி - மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தின் மூன்றாம் பங்குனித் திங்கள் உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. உற்சவத்தை முன்னிட்டு, பலநூறு பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ய-66)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 02.12.1961

மறைவு 03.04.2023

## திருமதி சிவபூபதி ஜெயபாலன்

அன்பு மலர்களாய் ஆண்டவன் அழைப்பினில்
தாதிய சேவையில் இணைந்திருந்த நாம்
இன்று உன்னை இழந்து தவிக்கின்றோம்.
இதயம் கனக்கின்றது.
ஈரவிழிகளில் நீர் சொரிகின்றது.
மறக்க முடியவில்லை எம்மனதால்
ஏற்கமுடியவில்லை. இயற்கையை வெல்ல
இன்று எமக்கு வழிதெரியவில்லை
கதறி அழுகின்றோம். கலங்கித் தவிக்கின்றோம்.
வேறு நாம் என்ன செய்வது..?

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் பாசமிகு கணவர், குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**A-87, 88 சாதாரண, விசேட பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்.**

(CS 24300) A-1



பரந்தன் - குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவைக் கண்ணகை அம்மன் கோயிலில் பங்குனித் திங்கள் வேள்விப் பெருவிழா நேற்றுத் திங்கட்கிழமை சிறப்பாக இடம் பெற்றது (ய-9)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம் ஏப் 4

யாழ். வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு மற்றும் புலமையாளர் கௌரவிப்பு நிகழ்வு அதிபர் ந.இரவீந்திரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய-66)

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 12 . 1961



இறப்பு 03 . 04 . 2023

## திருமதி ஜெயபாலன் சிவபூபதி (லதா)

**(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)**

தண்ணீர்தாழ்வு கட்டுவனைப்பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, மருதனார் மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாலன் சிவபூபதி (லதா) நேற்று (03.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கறுப்பையா கமலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயபாலன் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவசோதி (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும், கமலக்கண்ணன் (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 900 6931**

(CS 24306) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சி.எஸ்.கே. திரில் வெற்றி

சென்னை, ஏப். 4

ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் திரில் வெற்றியைப் பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார் லக்னோ அணித்லைவர் கே.எல். ராகுல். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ருத்துராஜ் ஹெய்க்வாட் மற்றும் கொன்வே இணை ஆரம்பத்திலிருந்தே அதிரடியைக் கையிலெடுத்து லக்னோவின் பந்து வீச்சாளர்களை அடித்து நொருக்கியது. இருவரும் முதலாவது பவர்ப்ளே நிறைவில் விக்கெட் இழப்பின்றி 79 ஓட்டங்களைப் பெற்று பலமானதொரு அடித்தளத்தை அமைத்தனர். ஆரம்ப இணைப்பாட்டமாக 110 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் ரவி பிஸ்னோயின் பந்து வீச்சில் ஹெய்க்வாட் ஆட்டமிழந்தார். அவர் 4 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 31 பந்துகளில் 57 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்களும் அதிரடியைக் கைவிடாமல் ஆட்டத்தை நகர்த்திச் சென்றனர். சிவம் டுபே மற்றும் அம்பதி ராயுடு தலா 27 ஓட்டங்களையும் மொய்ன் அலி 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இறுதியில் அணித்தலைவர் டோனியும் ஆட்டத்தை முடித்துவைக்கும் தனக்கே உரித்தான பாணியில் அதிரடி காட்ட சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 217 ஓட்டங்களைக் குவித்தது. மிகச்சிறந்த வேகப்பந்துவீச்சாளர்களில் ஒருவரான மார்க் வூட்டின் ஓவரிலேயே டோனி தொடர்ச்சியாக இரண்டு சிக்ஸர்களைப் பறக்கவிட்டமை குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் லக்னோ அணி சார்பாக ரவி பிஸ்னோய் மாத்திரம் ஓரளவு சிக்கனமாகப் பந்து வீசி 28 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

லக்னோவின் இன்னிங்ஸ் 218 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நோக்கில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய லக்னோ அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் இணைப்பாட்டம் சிறப்பாக அமைய பவர்ப்ளே நிறைவில் 80 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் காணப்பட்டது. சென்னைப் பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்த கைல் மேயர்ஸ் 2 சிக்ஸர்கள் 8 பவுண்டரிகள் அடங்கலாக 22 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்று மொய்ன் அலியின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ராகுலும் 20 ஓட்டங்களுடன் மொய்ன் பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். சென்னை அணியின் சுழற்பந்துவீச்சாளர்களான மொய்ன் மற்றும் சான்ட்னர் சிறப்பாகப் பந்து வீசி லக்னோ அணியின் ஆரம்ப வீரர்களை ஆட்டமிழக்கச் செய்ததுடன் ஓட்ட வேகத்தையும் கட்டுப்படுத்தினர். தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய லக்னோ அணிக்கு மத்திய வரிசை வீரர்களான ஸ்டொய்னிஸ், நிக்கொலஸ் பூரன் இணை சிறிது ஆறுதலளித்தது. ஸ்டொய்னிஸ் 21 ஓட்டங்களுடனும் பூரன் 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 18 பந்துகளில் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அணி 156 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

அடுத்துவந்த படோனி மற்றும் கௌதம் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடியபோதும் அது வெற்றிக்குப் போதுமானதாக இருக்கவில்லை. இறுதியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணியை 12 ஓட்டங்களால் வெற்றிகொண்டது. சிறப்பாகப் பந்து வீசிய மொய்ன் அலி 4 ஓவர்களில் 26 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், தேஸ்பாந்தே 2 விக்கெட்டுக்களையும், சான்ட்னர் ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சகல துறைகளிலும் பிரகாசித்த மொய்ன் அலி தெரிவானார். (ம-ரி-1)


## வேலையாள்கள் தேவை

அனுபவமுள்ள உணவு பரிமாறுபவர், சமையல் உதவியாளர், அப்பம்/இந்தியன் தோசை(மாஸ்ரர்) உடனடி தேவை. தங்குமிட வசதி உண்டு.

076 423 6862, 077 844 3590



## உதயன் வவுனியா கிளைக் காரியாலயத்திற்கான வேலை வாய்ப்பு




உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வவுனியா கிளைக் காரியாலயத்திற்கு கீழ்வரும் வெற்றி டங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

1) எழுதுவினைஞர் (Clerk)
2) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள். (Marketing Executive)

ஆர்வமுள்ளவர்கள் கீழ் உள்ள மின்அஞ்சல் முகவரி அல்லது தபால் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

Co/U/V0099
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

admin@uthayan.com


பரீட்சைக்கு அனுமதிக்காத விடயம்

# பல்கலையின் அலுவலர்கள் மூவரை விசாரணைக்கு முன்னிலையாக உத்தரவு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் தேவையான வரவு விகிதத்தைப் பூர்த்தி செய்யாத காரணத்துக்காகப் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்காத மாணவர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பல்கலைக்கழக அலுவலர்கள் மூவரை முன்னிலையாகுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படாத மாணவர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் மீதான விசாரணைகள் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளன. இந்த முறைப்பாட்டில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள விஞ்ஞான பீடாதிபதி, பரீட்சைக் கிளையின் பிரதிப் பதிவாளர் மற்றும் துணைவேந்தர் ஆகியோரையே நாளை நண்பகல் 12 மணிக்கு முன்னிலையாகுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் அறிவித்துள்ளார். எனினும், மாணவர்களின் மேன்முறையீட்டுக்கமைய நேற்று மாலை கூடிய விசேட விஞ்ஞான பீடச் சபை, வரவின்மை காரணமாகப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படாத மாணவர்களைத் தொடர்ந்து நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கு அனுமதிப்பதெனவும், அவர்கள் தவறவிட்ட அலகுகளுக்கென விசேட பரீட்சைகளை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளது. (ம)


## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

### புதிய கல்வியாண்டில்

ஆரம்ப பிரிவுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

05-04-2023

புதன்கிழமை பி.ப 3.30 மணி

தரம் 01 தரம் 02 தரம் 03 தரம் 04 தரம் 05

(புலமைப் பரிசில் விசேட வகுப்புக்கள்)

* யாழ். மாவட்ட பிரபல பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தலில்...
* மாதாந்தப் பரீட்சை - "வெற்றிக்கு வித்து"
* ஒவ்வொரு மாணவர்க்கும் தனிப்பட்ட கவனிப்பு
* அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:
077 459 8440

(CS 24297) A-1



## யாழ்ப்பாணம் மாநகரசபை பகிரங்க ஏலவிற்பனை

யாழ். மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கணக்கெடுப்பில் விற்பனை எனக் காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 18.04.2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்குபெற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 575.00 (வரியுடன்) இனைச் செலுத்தி ஏல்த்தில் பங்குபற்ற முடியும்.

ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

(CR 39)(K-1)



## சேவை நலன் பாராட்டு



Congratulations

எமது பாடசாலையில் சேவையாற்றி இன்று (04.04.2023)
ஓய்வுபெறும் எங்கள் ஆசிரியை

### திருமதி அகிலா அந்தோனி சகாயராஜ்

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி, B.Ed ஆரம்பக்கல்வி)

### சேவைக்கால விவரம்

ஆசிரியப்பணியில் : 1985.06.19 - 04.04.2023

கண்/வத்/விக்கினேஸ்வரா த.ம.வி. பன்வில 1985.06.19-1988.02.09
யா/கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி 1988.02.10 - 1989.12.31
கண்/வத்/விக்கினேஸ்வரா த.ம.வி. பன்வில 1990.01.01 - 2004.01.14
கண்/வத்/அபிராமி த.ம.வி. கலாபொக்க மடுல்கல 2004.01.15 - 2012.12.31
கண்/வத்/பரமேஸ்வரா த.ம.வி. மடுல்கல 2013.01.01 - 2014.03.02
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், 2014.03.03 - 2023.04.04

தனது 60 ஆவது வயதில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறுகின்ற ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மினிசூறாவளியால் 91 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப். 4

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மினி சூறாவளியால் 91 குடும்பங்களைச் சேர்ந்த 301 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக இடர்முகாமைத்துவப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளிலேயே கூடுதலான அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன. இதன்படி, ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், 82 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கிளிநொச்சி மகாவித்தியாலய வளாகத்தில் காணப்பட்ட பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், பாடசாலையின் தற்காலிகக் கொட்டகைகளும் சேதமடைந்துள்ளன. கிளிநொச்சி நகர் மற்றும் பெரிய பரந்தன் பகுதியில் அமைந்துள்ள நெற்களஞ்சியங்களும் சேதமடைந்துள்ளன. அத்துடன், கடைத்தொகுதிகளும் சேதமடைந்துள்ளன. இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான கூடுதல் தரவுகள் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன. (ம-113)

## கருநாட்டுக்கேணியில்...

கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே, இவ்வாறு அபகரிக்கப்பட்டு அங்கு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழிகாட்டலில், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினாலேயே இந்த சிங்களக் குடியேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு, சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளைப் பார்வையிடுவதற்கு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், கரைதுறைபற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேற்றுக் கருநாட்டுக்கேணிப் பகுதிக்குச் சென்ற நிலையில், குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் ஆகியோர் இணைந்து தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 1973ஆம் மற்றும் 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எமக்கு காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டது. இந்தக் காணிகளில் நாம் குடியிருந்ததுடன், பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டு வந்தோம். இவ்வாறிருக்கையில் அந்தக் காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள ஒருபோதும் நாம் அனுமதிக்கமாட்டோம். மேலும் முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நீர்ப்பாசன வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மக்களுக்குச் சொந்தமான மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அபகரிப்புச்செய்து அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கை தமிழ் மக்களை மேலும் அதிருப்திக்குள்ளும் துன்பத்துக்குள்ளும் தள்ளியுள்ளது - என்றனர். (அ-ம-246)

## எல்லைக்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தின் பூர்வீக எல்லைக்கிராமமான கருநாட்டுக்கேணியிலுள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக்காணிகளை ஆக்கிரமிப்புச் செய்து அங்கு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளும் முயற்சிகள் தற்போது முனைப்புப் பெற்றுள்ளன. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளிலும் தமிழர்கள் தமது விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கை செய்யும்போது மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சிங்கள மக்களாலும்கூட இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

எமது எல்லைக்கிராமங்களிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும்பான்மையினத்தவர்களால் தாக்கப்படுகின்ற சம்பவங்களும், தமிழர்களுடைய கால்நடைகள் திருடப்படுகின்ற சம்பவங்களும் மிகவும் மோசமான வகையில் இடம்பெறுகின்றன. இவ்வாறாக எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பலவித அழுத்தங்களுக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளில்கூட சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளன. இங்கு வாழும் ஆதிக்குடிகளான தமிழ் மக்களை முற்றுமுழுதாக அப்புறப்படுத்திவிட்டு, தமிழர்களின் எல்லைக் கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்றவேண்டும் என்ற நோக்குடனேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. எமது தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களை பாதுகாப்பதற்கு நாம் எந்த எல்லைக்கும் போகத் தயாராக உள்ளோம் - என்றார். (அ-ம-246)

## முல்லைத்தீவில்...

ஜெனிற்றா (வயது-42) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணும், வயோதிபத் தாயார் ஒருவரும் சிலாவத்தைப் பகுதியில் இருந்து கொக்கிளாய் செல்லும்போது, அவர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததையடுத்தே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. இதில் படுகாயமடைந்த ஜெனிற்றா முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-19)

## சட்டவிரோத...

வலியுறுத்தி, வடமராட்சி வடக்கின் 14 கடற்றொழிலாளர் சங்கங்களால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர்கள் எவரும் கடமைக்காக உள்ளே செல்லமுடியாதவாறு செயற்பாட்டு முடக்கமொன்றை ஏற்படுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவ்வழியே வருகை தந்த நீதிவானும் போராட்டம் காரணமாக திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

'வடமராட்சி கடற்பரப்புக்களில் சுருக்குவலைத் தொழில் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இதர சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளும் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குத் தீர்வொன்றைத் தருமாறு நாம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். எனினும் எந்தப் பயனும் இல்லை. கடற்றொழில் அமைச்சர் எமது கோரிக்கைகளை செவிமடுப்பதாயில்லை. இந்த சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகளால் மட்டுப்படுத்தப்பட்ட வலைகளைக் கொண்டு சிறியளவில் தொழில் மேற்கொள்ளும் நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். இந்தப் போராட்டத்தையடுத்து எமது பிரச்சினைகளை செவிமடுத்து அதைக் கருத்திற்கொண்டு செயற்படவில்லை என்றால், அடுத்ததாக வடமாகாணம் தழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, பிரதேச செயலரும் பொலிஸாரும் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் பேச்சுக்களை நடத்தினார்கள். கடற்படையினருடன் கலந்துரையாடி அடுத்த ஒரு வாரத்துக்குள் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் என்று பொலிஸார் வாக்குறுதியளித்தனர். அவர்களின் வாக்குறுதியை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (அ-ம-26,20)

## ஆளுநரின்...

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை நிர்வகிப்பதில் இருந்து யாழ். மாநகரசபையை வெளியேற்றும் வடக்கு ஆளுநரின் பணிப்புரைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் முதல்வர் ... இந்த வழக்கை ... தாக்கல் செய்துள்ளார். நாவலர் கலாசார மண்டபத்தை நிர்வகிப்பதில் இருந்து யாழ்ப்பாணம் மாநகரசபையை வெளியேறப் பணித்த வடக்கு மாகாண ஆளுநர், அதைப் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

வடக்கு ஆளுநரின் இந்த நடவடிக்கையைக் கைவிடக்கோரி யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் 28 பேரின் கையொப்பங்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் வ. பார்த்தீபனால் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ-எ-26,66)

## எரிவாயு...

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை இன்று நள்ளிரவுமுதல் சுமார் ஆயிரம் ரூபாவால் குறைக்கப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரான முதித பீரிஸ் தெரிவித்ததாவது:-

உலக சந்தையில் எரிவாயு விலை வீழ்ச்சி மற்றும் ரூபாவின் மதிப்பு வலுவடைந்ததையடுத்து இலங்கையில் எரிவாயுவின் விலைகள் மறுசீரமைக்கப்படவுள்ளன. இதன்படி, 12.5 கிலோ கிராமுடைய ஒரு எரிவாயு சிலிண்டர் சுமார் ஆயிரம் ரூபா வரை குறைக்கப்படும். வரலாற்றில் லிட்ரோ எரிவாயுவின் அதிகூடிய விலைத் திருத்தமாக இது இருக்கும் - என்றார். (அ-ம)

## 3 தமிழ்...

கைதிகள் மூவரை விடுதலை செய்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

14 ஆண்டுகளாகத் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவர் மீதும் முன்வைக்கப்பட்ட அரச சாட்சியத்தின் ஒப்புறுதி வாக்குமூலம், நிபுணத்துவ சாட்சியங்கள் மற்றும் சான்றுப்பொருள்கள் என்பன எதிரிகளான தமிழ் அரசியல்கைதிகள் மூவர் மீதான 27 குற்றச்சாட்டுகளை போதுமான ஆதாரங்களுடன் எண்பிக்கவில்லை என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது தீர்ப்பில் கோடிட்டுக் காட்டினார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருந்த யாழ்ப்பாணம் வேலணையை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது -45), கரவெட்டியை சேர்ந்த மதியரசன் சுலக்சன் (வயது- 34), முள்ளியவளையை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது -33) ஆகிய மூவருக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. அந்த வழக்கிலேயே வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்து மூவரையும் விடுதலை செய்தது. அவர்களது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட நிலையில் மூவர் மீதான வழக்கு விசாரணைகளும் அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய முன்னாள் போராளி ஒருவர் அரச தரப்பின் சாட்சியாக மாற்றப்பட்டார். அவரது பாதுகாப்புக் காரணங்களுக்காகவே வழக்கு விசாரணைகளை அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றுவதாக சட்டமா அதிபர் அறிவித்திருந்தார். பின்னர் தமிழ் அரசியல் கைதிகளின் உணவு ஒறுப்புப் போராட்டம் மற்றும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளையின் அடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மீளவும் வழக்கு விசாரணைகள் மாற்றப்பட்டன

தமிழ் அரசியல் கைதிகள் மூவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 27 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கில் அரச சாட்சியாக மாற்றப்பட்ட முன்னாள் போராளி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருந்த நிலையில் அவர் மறுவாழ்வுக்கு உட்படுத்தப்படாமல் அரச சாட்சியாக மாற்றப்பட்டமை தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது தீர்ப்பில் கேள்வியாக எழுப்பியிருந்தார்.

அரச சாட்சியாக மாற்றப்பட்டவரின் சாட்சியம் ஒப்புறுதி விக்கவில்லை என அதனை மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார். வழக்கில் சேர்க்கப்பட்ட தடயவியல், உடற்கூற்று நிபுணத்துவ சாட்சியங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள் குற்றச்சாட்டுகளை எண்பிக்கும் வகையில் போதிய ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பில் குறிப்பிட்டார். (அ-ம-18,110)

## சேவை

CCTV கமராக்கள் பொருத்துதல், பழுது பார்த்தல், பராமரிப்பு வேலைகள் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

V.Vision Security Solutions
077 998 6772


## மஹோற்சவம்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹிபுரம் அம்பாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-14)

## கானான் விடுதி விவகாரம்; மூவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 4

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியில், கானான் ஜெப ஆலயத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிய மாணவர்விடுதியின் முகாமையாளர், விடுதிக்காப்பாளர், அருட்சகோதரி ஒருவர் என மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சிறுவர் விடுதியில் இருந்து மூன்று மாணவிகள் அண்மையில் தப்பிச் சென்ற நிலையில், அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு சிறுவர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து சிறுவர் நன்நடத்தைத் திணைக்கள அதிகாரிகளாலும், பொலிஸாராலும் நேற்றுமுன்தினம் அந்த விடுதியில் விசாரணைகள் நடத்தப்பட்டன. இதன்போது சிறுவர் நன்நடத்தைத் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்படாமலும், உரிய அனுமதிகளைப் பெறாமலும் இந்த விடுதி இயங்கியமையும், அந்த மாணவர் விடுதியில், சிறுமிகளைக் கட்டாய மத மாற்றம் செய்தமை, கடினமான வேலைகளை வழங்கியமை, துன்புறுத்தியமை உள்ளிட்ட விரும்பத்தகாத [illegible]ல்கள் இடம்பெற்றமையும் கண்டறியப்பட்டு வெளிக்கொணரப்பட்டது. இதையடுத்து மாணவர் விடுதி [illegible] முகாமையாளர், விடுதிக்காப்பாளர், அருட்சகோதரி ஒருவர் என மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(ம)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை 125000,00/=

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM

தொடர்பு: 076 755 8606
077 6385 683

(CS 24256)A-1

## மணமகள் தேவை

01. மாவிட்டபுரம் - இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1985 சதயம், Civil Engineering, Charted Accountant, Australia Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
02. மாவிட்டபுரம் - இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1983 உத்தரம், MBBS Doctor, Australia Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
03. நல்லூர் - வடமராட்சி, இந்து, கௌரவகுலம் (V), 1976 அச்சுவினி, MSc Network Engineer, Australia Citizen, Divorce மணமகனிற்கு மணமகள் தேவை.
04. உரும்பிராய், இந்து, கௌரவகுலம் (V), 1974 திருவோணம், BSc in Human Biology, Acca Dip, Computer Account, Finance Advisor, Canada Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
05. நெல்லியடி, இந்து, கௌரவகுலம் (V), 1978 கேட்டை, BSc IT Engineering (Canada University),Canada Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
06. கோண்டாவில், இந்து, கௌரவகுலம் (V), 1979 அவிட்டம், BSc, MSc, Cost Engineer/ Consultant, Canada Citizen, Divorce மணமகனிற்கு மணமகள் தேவை.
07. காரைநகர் - சுழிபுரம், இந்து, கௌரவகுலம் (V), 1980 சித்திரை, Bachelor of Software Engineering & Managment (Canada University), Canada Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
08. மாதகல் - கோப்பாய், இந்து, கௌரவகுலம் (V), 1981 பூராடம், BSc Computer Science (U.K), U.K Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
09. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1979 உத்தராடம், A/L, Business, U.K Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.
10. காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1975 விசாகம், MSc Social Science, running own Business, U.K Citizen மணமகனிற்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
S.Sharma J.P. Astrologer
WhatsApp:077 8038 193
Tel:077 5393 728

(CS 24299)A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

(CS 24289) A-


## மரண அறிவித்தல்

மலர்வு 26 . 10 . 1950



உதிர்வு 31 . 03 . 2023

### சுப்பிரமணியம் ஜானகி

வீரபத்திரர் வீதியைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜானகி கடந்த (31.03.2023) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லட்சுமி - கந்தரேசு தம்பதிகளின் அன்பு மகளும், ருக்குமணி, சாரதா, காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் சகோதரியும், ரெத்தி, குமாரி, சாந்தி, பாமா, ராதா, விக்கி, காலஞ்சென்ற விமல் ஆகியோரின் அன்புத் தாயும், துரை, லட்சுமணன், ஜெகன், சதீஸ், சீலன் ஆகியோரின் மாமியாரும், வேணு, கயூரி, வாசன், றீகன், சேபா, கோல்டன், நிரோ, முரளி, சங்கர், கண்ணம்மா, அபிஷா, சரோன், சுவிற், ஜெனி ஆகியோரின் பேர்த்தியும், அஸ்வியா, அபினாஸ், அவிக்னன், கனிஸ்கா, கவிஷா, கெயாஸ், அயிஷா, ரியானா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (04.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (கச்சாய் வீதி, சாவகச்சேரி) நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு அருகில் அமைந்துள்ள கிறிஸ்தவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/24287)AH-1

தகவல்: குடும்பத்தினர்.

077 800 2554, 077 483 7255


## கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு

பிரதான வீதி, சங்கானையில் அமைந்துள்ள 2400 சதுர அடி கொண்ட கட்டடமும் அதற்குரிய 2000 சதுர அடி கொண்ட வாகனத் தரிப்பிடத்துடன் குத்தகைக்கு / வாடகைக்குக் கொடுக்கப்படும். (அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குப் பொருத்தமானது)

(CS/24283)AH-1

076 745 6693

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 69 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200.000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814
076 7390 413

(CS 24295) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ[illegible]திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.